கலைஞர் 100
1924 - 2023

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி:12.08.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்
# உலக உயிரி எரிபொருள் தினம் 2025

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, உலக உயிரி எரிபொருள் தினம் 2025-ஐ 11.08.2025 அன்று 250 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்புடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சி, சிறப்பு விருந்தினர்களை வரவேற்கும் அழைப்புடன், புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர். தே. ரமேஷ் அவர்களின் வரவேற்புரையுடன் தொடர்ந்து, வேளாண் பொறியியல் கல்லூரி முதன்மையர் முனைவர். அ. ரவிராஜ் அவர்கள், உயிரி எரிபொருள்களின் நிலையான வளர்ச்சியில் உள்ள முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். உயிரி எரிபொருளின் முக்கியத்துவத்தை பேராசிரியர் முனைவர் பி. சுப்பிரமணியம் விளக்கினார். அமிர்தா வேளாண்மை அறிவியல் கல்லூரி, வேளாண் நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் எம். இனியகுமார் "மைக்ரோபியல் உயிரி எரிபொருள் உற்பத்தியில் சமீபத்திய முன்னேற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழல் வட்டார பொருளாதாரம்" என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு வழங்கினார்.

விழாவின் ஒரு பகுதியாக, பயோடீசலைப் பயன்படுத்தி தண்ணீர் பம்பின் இயங்கும் இயந்திரம் குறித்த செயல் விளக்கம் செய்யப்பட்டது. "கிரீன் ஃப்யூல் ஃபெஸ்ட் 25 – லாஃப் ஃபார் அ கிரீனர் டுமாரோ" என்ற தலைப்பில் ஆன்லைன் மீம் போட்டி நடத்தப்பட்டு, உயிரி எரிபொருள் விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட்டது. நிகழ்ச்சியின் இறுதியில், சிறப்பு விருந்தினர்களுக்கும் வெற்றியாளர்களுக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. அதன் பின், புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறையின் பேராசிரியர் முனைவர் வி. பழனிசெல்வம் அவர்கள் நன்றியுரை வழங்கி, அனைவருக்கும் தனது நன்றியை தெரிவித்தார். விழா, மூன்றாம் ஆம் ஆண்டு பி.டெக் (EEE/AGE) மாணவர்களின் உயிரி டீசல் விளக்கு ஏற்றுதல் நிகழ்வுடன் நிறைவுற்றது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**